FWC

**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre
## தவணைப் பரீட்சை, யூன் - 2016
## Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | இந்து சமயம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

➢ **1 முதல் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 5 பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப் பெயர்களுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அவ்விலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

01) (1) சித்திதாதா (2) ஹோம்பர் (3) ஞானமுதல்வன்
(4) ஏகநாதன் (5) அச்சுதன் (...........)

02) (1) ஈதல் (2) ஓதல் (3) ஓதுவித்தல்
(4) காத்தல் (5) லேட்டல் (...........)

03) (1) பாணினி (2) தேலாடியார் (3) ரிஷபத்தளிபிலார்
(4) தலைக்சோலிகர் (5) நிருத்தலிடங்கியர் (...........)

04) (1) பிரதிவிமபவாதம் (2) பரிணாமவாதம் (3) ஏகான்மவாதம்
(4) விவர்த்தவாதம் (5) மாயாவாதம் (...........)

05) (1) நகுலரதம் (2) சகாதேவரதம் (3) அர்ச்சனன் ரதம்
(4) இராமரதம் (5) தருமரதம் (...........)

➢ **6 - 10 வரையான வினாக்களில் உள்ள ஐந்து சோடிப் பெயர்களுள் ஒரு சோடிப் பெயர்கள் பொருத்தமற்றுள்ளது. அந்த பொருத்தமற்ற சோடிச் சொல்லை இனங்கண்டு அவ் இலக்கத்தை இனங்கண்டு புள்ளிக்கோட்டில் குறிப்பிடுக.**

06) (1) விவேகானந்தர் - புவனேஸ்வரிதேவியார்
(2) பசுபதிச் செட்டியார் - சிவகாமி அம்மையார்
(3) இராமநாதன் - செல்லாச்சி அம்மையார்
(4) விபுலானந்தர் - கண்ணம்மை
(5) சு. இராசரத்தினம் - மீனாட்சிப்பிள்ளை (...........)

07) (1) லீணாதரன் - இராஜசிம்மன்
(2) வித்தியாநிதன் - பரமேஸ்வரன்
(3) நவயுகசங்கரர் - இராமானுஜர்
(4) சதுர்மறைப்புரோகிதர் - பேயாழ்வார்
(5) நம்மாழ்வார் - சங்கரர் (...........)

08) (1) ஆனந்தலகரி - சங்கரர்
(2) மாண்டுக்கியகாரிகை - கௌடபாதர்
(3) வக்கிரமோர்வலி - மகேந்திரவர்மன்
(4) விஷ்ணுதத்துவநிர்ணயம் - ஆண்டாள்
(5) குமாரசம்பவம் - காளிதாசர் (...........)

09) (1) பிரகிருதி - சாங்கியம்
(2) அவித்தை - வேதாந்தம்
(3) ஆவணம் - சைவசித்தாந்தம்
(4) திவ்யதேசம் - வைணவம்
(5) தருமபூதஞானம் - பௌத்தம் (...........)

10) (1) நமசிவாயமூர்த்திகள் - மறைஞானதேசிகர்
(2) யமுனாசாரியார் - இராமானுஜர்
(3) யோகன் சுவாமிகள் - கடையிற்சுவாமிகள்
(4) நாரதர் - சனற்குமாரர்
(5) நசிகேசன் - யமன் (...........)

➢ **11 முதல் 15 வரையுள்ள வினாக்களில் 'அ', 'ஆ' என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலில் உள்ளவை 'ஆ' நிரலில் உள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையவை. 'அ' நிரலில் உள்ளவற்றை 'ஆ' நிரலில் உள்ளவற்றுடன் பொருத்தமாக ஒழுங்குபடுத்தும் போது 5 சேர்மானங்களில் ஒன்று சரியானதாக அமையும். அதனைத் தெரிவு செய்து இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

11)

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (1) மாயாவாதம் | A - தொண்டரடிப்பெரியாழ்வார் |
| (2) குணபதீஸ்வரம் | B - சூர்னோற்சவம் |
| (3) திருப்பள்ளி எழுச்சி | C - மகேந்திரவர்மன் |
| (4) ஆலய வழிபாடு | D - சங்கரர் |
| (5) பெருமாக்கோதை | E - திருப்பாவை |

(1) BACDE (2) CBADE (3) EDCAB (4) DCABE (5) BCDEA (...........)

12)

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (1) வேல் | A - பிரணவமாகிய ஓங்காரம் |
| (2) மயிற்தோகை | B - பாசங்களில் இருந்து நீங்கி விடுதலையை நாடுதல் |
| (3) மயிலிறகுகள் | C - ஆன்மீக விடுதலை பெறுதல் |
| (4) காவடியெடுப்பவர் | D - சூரன் ஆணவம் அடங்கி மயிலானமை |
| (5) வழிபாட்டுமுறை | E - ஆழ்ந்து அகன்ற நுண்ணிய கடவுட் கொள்கை |

(1) ABDEC (2) EADBC (3) EACBD (4) EADCB (5) ADECB (...........)

13)

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (1) ஞானம் | A - முற்றும் துறந்தநிலை |
| (2) பகவத்கீதை | B - 19 பாவங்கள் |
| (3) கர்மம் | C - "யதோதர்மஸ்யததோஜெய" |
| (4) சந்நியாசம் | D - பரவித்தை |
| (5) பக்தி சாத்திரங்கள் | E - பற்றற்ற உழைப்பின் வழி |

(1) AECDB (2) EABDC (3) DCEAB (4) ABCDE (5) BCEAD (...........)

14)

| 'அ' | 'ஆ' |
|---|---|
| (1) 38 அதிகாரங்கள் | A - நல்வழி |
| (2) 108 கூற்றுக்கள் | B - ஆத்திசூடி |
| (3) 40 வெண்பாக்கள் | C - அறத்துப்பால் |
| (4) 70 அதிகாரம் | D - பொருட்பால் |
| (5) 120 அத்தியாயம் | E - சரகசம்ஹிதை |

(1) CBADE (2) EDBCA (3) CBAED (4) ABECD (5) ABCDE (...........)

15) ‘அ’ ‘ஆ’

| ‘அ’ | ‘ஆ’ |
|---|---|
| (1) ஜலசயனம் | A - தஞ்சைப் பெருங்கோயில் |
| (2) தென்திசை மேரு | B - காஞ்சிகைலாசநாதர் கோயில் |
| (3) பெரியகற்றளி | C - மாமல்லபுரம் |
| (4) ஜராவதேஸ்வரம் | D - தர்மராஜரதம் |
| (5) சிற்புக்கலைக்களஞ்சியம் | E - இராஜராஜேஸ்வரம் |

(1) CAEBD (2) CABED (3) CABDE (4) ACBDE (5) CADEB (...........)

➢ **மேல்வரும் பகுதிகளில் தரப்பட்டுள்ள சொற்களில் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்ட ஒரு விடயத்தோடு தொடர்புடையவை அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 16 தொடக்கம் 22 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான தொகுதியைத் தெரிவு செய்க.**

| | | | |
|---|---|---|---|
| A<br>இலிங்காயுத்தர் | B<br>அக்கமணி | C<br>கந்தபுராணம் | D<br>தவப்பெண் |
| E<br>பசுமம் | F<br>அத்துவிதமுத்தி | G<br>சிலாபரீட்சணம் | H<br>கோயிற் புராணம் |
| I<br>சுக்கிர நீதி | J<br>செந்நாப்போதர் | K<br>பதமுத்தி | L<br>வித்தையாசான் |
| M<br>இலிங்க புராணம் | N<br>சேக்கிழார் புராணம் | O<br>பதிகங்கள் | P<br>தாண்டவம் |

16) சைவநாற்பாதங்கள் கூறும் முத்தியுடன் தொடர்புடையவை
(1) EK (2) KB (3) FK (4) DK (5) LF (...........)

17) சிவவிரதத்துடன் தொடர்புடைய தொகுதி
(1) CM (2) EA (3) HN (4) MH (5) NC (...........)

18) குரு இலிங்க, வழிபாட்டுடன் தொடர்புடைய தொகுதி
(1) AE (2) BC (3) MN (4) HN (5) LA (...........)

19) சிவசின்னங்களுடன் தொடர்புடைய தொகுதி
(1) AB (2) BE (3) EK (4) FB (5) KL (...........)

20) தமிழ் நீதி நூல்களுடன் தொடர்புடைய தொகுதி
(1) CI (2) NM (3) DJ (4) HG (5) DB (...........)

21) உமாபதி சிவாச்சாரியாருடன் தொடர்புடைய தொகுதி
(1) HN (2) MN (3) HC (4) GI (5) NI (...........)

22) திருவுருவ அமைப்புக்களுடன் தொடர்புடைய தொகுதி
(1) HI (2) GI (3) NM (4) NG (5) HM (...........)

➢ **23 தொடக்கம் 25 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் 5 கூற்றக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றோடு பொருந்தாது. அவ்வாறு பொருந்தாததை இனங்கண்டு அவ்விலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

23) (1) சோழராட்சியில் கோயில்கள் சமுதாய மைய நிறுவனங்களாயின
(2) பல்லவர்காலப் பக்தி நெறிப் பண்பாடு சோழராட்சியில் நிறுவனமாகியது.
(3) வைணவ, சைவ, பக்தி பாடல்கள் தொகுக்கப்பட்டன.
(4) தொண்டை மண்டலத்தில் ஆரம்பித்த பக்தி இயக்கம் சோழ மண்டலத்திலும் பரவலாயிற்று.
(5) சோழர்காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்தி இயக்கத்தை முன்னெடுத்தனர். (...........)

24) (1) விஷ்ணு மீது பக்தி கொண்டோர் ஆழ்வார்களாவர்.
(2) திருக்குறுங்குடிப் பெருமாள் அருளால் வைகாசி விசாகத்தில் அவதரித்தவரே ஸ்சடகோபர்
(3) வேதக் கருத்துக்களின் சாரமாக நம்மாழ்வார் பாடல்கள் விளங்குகின்றன.
(4) விஷ்ணுவைத் தனது காதலனாகக் கொண்டு ஆண்டாள் பல்லாண்டு வாழ திருப்பல்லாண்டு பாடியுள்ளார்.
(5) பன்னிரு ஆழ்வார்களின் பாடல் தொகுதியே நாலாயிரம் திவ்விய பிரபந்தம் ஆகும். (...........)

25) (1) இந்து வழிபாட்டு முறைகளில் மருத்துவச் சிந்தனைகள் பல இனங் காணப்படுகின்றது.
(2) தோப்புக் கரணம் போடுவதனால் நரம்பு மையங்கள் தூண்டப்பட்டு நினைவாற்றல் அதிகரிக்குமென அமெரிக்க விஞ்ஞானி கூறுகிறார்.
(3) தலயாத்திரை மூலம் கிரிவலம் செய்வதனால் தசைகள் பலமிழக்கப்படுகின்றன.
(4) யோகாசன முறைகள் மூலம் தீர்க்கப்படாத பல நோய்கள் தீர்க்கப்படுகின்றன
(5) விபூதி 16 இடங்களில் தரிக்கும் முறை அக்குபஞ்சர் வைத்தியத் தறையுடன் தொடர்புபடுகின்றது. (...........)

➢ **இலங்கையில் கி. மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 9 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி அனுராதபுர காலப் பகுதியாகும். இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு 26 அம் வினா தொடக்கம் 28 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

A - சிங்கள மன்னர்கள் தமது அரண்மனையின் வைதீக சடங்குகளையும், வழிபாடுகளையும் மேற்கொண்டன.
B - அனுராதபுரத்தில் இந்து மதம் தனிததுவமான நிலையிலும் பௌத்த மதத்துடனும் இணைந்து வளர்ச்சியடைந்தது.
C - 2 அம் சேனன், எள்ளாளன், துட்டகைமுனு போன்ற மன்னர்கள் காலத்தில் இந்து சமயம் மேன்மை அடைந்திருந்தது.
D - அரண்மனைகளில் இந்து சமய புரோகிதர்கள் வேள்விகளை ஆற்றுதல் கிரிகைகளை மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.
E - சிவன் விஷ்ணு கணபதி போன்ற தெய்வங்கள் இக்கால மக்களால் வழிபடப்பட்டதாக அறிய முடிகிறது.
F - அனராதபுரகால வழிபாடுகளில் இந்து தெய்வங்களின் வெண்கல படிமங்கள் கிடைக்கப்பட்டுள்ளன.

26) அனுராதபுர காலத்தில் மன்னர்கள் இந்து மதத்தை ஆதரித்தமையை எடுத்துக் காட்டும் சேர்மானம்
(1) AF (2) AC (3) CE (4) AE (5) CB (...........)

27) அனுராதபுர காலத்தில் வைதீக தெய்வங்கள் வழிபடப்பட்டன. என்பதற்குப் பொருத்தமான சேர்மானம்
(1) AB (2) BD (3) CA (4) EF (5) EA (...........)

28) மன்னர்கள் தமது கிரியைகள், சடங்குகளை நிகழ்த்துவதற்கு புரோகிதர்களை ஆதரித்தனர். இதற்கு பொருத்தமான சேர்மானம்
(1) BC (2) DC (3) AE (4) FC (5) AD (...........)

➢ **29 தொடக்கம் 35 வரையான ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் 5 விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருத்தமானதைத் தெரிவு செய்க.**

29) சித்தாந்த முதல் நூலும் சகார்பு நூலும்
(1) சைவசித்தாந்தத்தின் முதல் நூல் சிவஞான போதமாகும்.
(2) சைவ சித்தாந்தம் பற்றிய கருத்தியலை முதன் முதலில் முன்மொழிந்த நூல் திருவுந்தியார் ஆகும்.
(3) சிவஞான போதகத்தின் ஆசிரியர் மெண்கண்டர் ஆவார்.
(4) சைவசித்தாந்த அட்டகம் சிவஞான போதகத்தின் சார்பு நூலாகும்.
(5) சிவப்பிரகாசமே சைவ சித்தாந்தத்தின் சார்பு நூல் எனச் சொல்வோரும் உளர். (...........)

30) ஈழத்துச் சித்தர்களும், அவர்களது இயல்புகளும்
(1) சித்தத்தை இறைஞானத்தில் வைத்து வழிபாடு செய்தவர்கள் சித்தர்களாவர்.
(2) பிராணாயாமத்தின் மூலம் சித்தம் ஒடுங்கி அட்டாங்க யோக முறையில் வழிபாடாற்றுவார்கள்.
(3) அட்டமாசித்திகள் கைவரப்பெற்றவர்கள்.
(4) சித்தர்களில் சிவவாக்கியரின் பொதனைகள் புரட்சிகரமானவை அல்ல.
(5) ஈழத்துச் சித்தர்களில் முதன்மையானவர் கடையிற் சுவாமிகள் ஆவார். (...........)

31) இறையும் இறை இயல்பும்
(1) இறைவன் ஒருவன் உளன்
(2) எங்கும் நிறைந்தவர்
(3) எல்லாம் வல்லவன்
(4) எல்லாம் அறிபவர்
(5) இறப்பிற்கும் பிறப்பிற்கும் உட்பட்டவர் (...........)

32) உமாபதி சிவாச்சாரியாரும் சைவசித்தாந்தமும்
(1) சிவஞானபோதம் என்னும் முதல் நூலுக்கு சிவப்பிரகாசம் என்னும் வழி நூலை எழுதியவர்.
(2) பெற்றான் சாம்பானுக்கு முத்தி அளித்தவர்
(3) சைவ சித்தாந்த உருவாக்கத்துக்கு பணி புரிந்தவர்
(4) கொற்றவன் குடியில் பிறந்தவர்
(5) திருமுறை கண்ட புராணத்தை எழுதியவர் (...........)

33) உபநிடதமும் இந்து தத்துவங்களும்
(1) வாழ்வியலில் சிந்தனைகளை எடுத்தக்கூறும் நூல் உபநிடதம்
(2) உபநிடத மகாவாக்கிய விளக்கமே இந்து தத்துவங்களாகும்.
(3) சமண, பௌத்த தத்துவங்கள் தொன்ற மூலங்களாகும்.
(4) பிரபஞ்ச உண்மையை விளக்குபவை.
(5) ஆன்மா, பிரம இருப்பை விளக்குபவை. (...........)

34) நாட்டியமும் அழகுணர்ச்சியும்
(1) கலைகள் இறைவனின் படைப்பு என்பது நம்பிக்கை
(2) கதகளி, பரதநாட்டியம் என்பன இந்திய நாட்டிய மரபில் சிறப்பானவை
(3) கரகாட்டம், காவடி, கும்மி என்பன நாட்டார் கலைகளுள் அடங்கும்
(4) இந்து கலைமரபு அழகுணர்ச்சியையும் பக்தியையும் தரவல்லது.
(5) இந்து கலைமரபில், பக்தியில் தாண்டவ நாட்டியம் முக்கியமற்றது. (...........)

35) திருமுறையின் தெய்வத் தன்மையும் ஓதலும்
(1) திருமுறைகள் தெய்வத் தன்மை வாய்ந்தவை.
(2) இறைவன் உவந்தேற்கும் பாக்களுள் திருமுறைகள் முதன்மையானவை.
(3) திருமுறைகள் இறைவனுக்கு சூட்டப்படாத பாமாலைகளாகும்.
(4) திரமுறைகளின் திருவருட்திறத்தால் பல அற்புதங்கள் நிகழத்தப்பட்டன.
(5) திருமுறைகள் கிரியைகளின் போதும் பாடப்படுகின்றன. (...........)

➢ **36 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

36) "என்னிடம் அடைக்கலம் புகுதலில் பொருந்தி தன்னடக்கம் பயின்று கர்மபலன் முழுவதையும் எனக்கு அர்ப்பணம் செய்" எனக் கூறும் இலக்கியம்
(1) பிரமசூத்திரம் (2) பகவத் கீதை (3) இராமாயணம்
(4) திரமந்திரம் (5) சிவஞானபோதம் (...........)

37) வைரவ விரதங்களின் ஒன்று
(1) சிவராத்திரி (2) நவராத்திரி (3) சித்திரைப்பரணி
(4) ஏகாதசி (5) பிரதோசம் (...........)

38) இந்திய வானியல் ஆராச்சியாளர்களாக விளங்கியவர்கள்
(1) புளிசர், ஆந்திரேயர் (2) வராகமீகிரர், சரகர் (3) ஆரியபட்டர், வராகமீகிரர்
(4) பிரமகுப்தர், அஸ்ருதர் (5) சரகர், சனகர் (...........)

39) வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் நூல்
(1) சுக்கிரநீதி (2) திருக்குறள் (3) மானசாரம்
(4) பிரம்ம சூத்திரம் (5) பிருகத் சம்கிதை (...........)

40) இந்திய மருத்துவ துறையில் அறுவைச் சிகிச்சையின் தந்தை
(1) ஆத்திரேயர் (2) ஆகர்சரகர் (3) தன்வந்திரி
(4) அஸ்ருதர் (5) ஆரியப்பட்டர் (...........)

41) 19ம் நூற்றாண்டில் வெளிவந்த சைவசமய பத்திரிகை சார்ந்த தொகுதி
(1) இலங்கை நேசன், தினகரன், விஞ்ஞானவர்த்தினி
(2) விஞ்ஞானவர்த்தினி, ஈழநாடு, தினகரன்
(3) வீரகேசரி, தினகரன், உதயபானு
(4) இந்துசாசனம், இலங்கை நேசன், சைவ உதயபானு
(5) உதயம், வலம்புரி, இந்துசாசனம் (...........)

42) பத்து மணக்கோயில் என்ற முருகன் ஆலயம்
(1) கம்போடியா (2) மலேசியா (3) சம்பா
(4) யாவா (5) தாய்வான் (...........)

43) பஞ்சலோகத்தால் முதன் முதலில் படிமக்கலை வளர்க்கப்பட்ட காலம்
(1) சங்ககாலம் (2) பல்லவர் காலம் (3) சோழர் காலம்
(4) நாயக்கர் காலம் (5) சங்கமருவிய காலம் (...........)

44) மிளா நகரம் பற்றிய கருமத்தை முன்வைத்த வேதாந்தி
(1) சங்கரர் (2) இராமானுஜர் (3) கௌடபாதர்
(3) மத்துவர் (5) பாதராயணர் (...........)

45) நடராஜ வடிவத்தில் உயிர்களுக்கு ஏற்படும் துன்பங்களை நீக்கும் அங்கமாக கருதப்படுவது
(1) முகம் (2) சடாமுடி (3) நெற்றிக்கண்
(4) தூக்கிய திருவடி (5) ஊன்றிய திருவடி (...........)

46) "இருளில் இருந்து என்னை ஒளிக்கு இட்டுச் செல்வாயாக" எனக்கூறும் உபநிடதம்
(1) ஐதரேயம் (2) சாந்தோக்கியம் (3) முண்டகம்
(4) கன உபநிடதம் (5) பிருகதாரணிய (...........)

47) "மயில்வாகணன்" என்பதால் முருகனுக்கு வழங்கப்பட்ட பெயர்
(1) கஜவாகனன் (2) மூஹிகவாகனன் (3) கிரவுஞ்சபேதனன்
(4) சகிவாகனன் (5) சுப்பிரமணியன் (...........)

48) சித்தாந்த சாத்திரங்களில் மிகக் குறைந்த வெண்பாக்களால் அமைந்த நூல்
(1) உண்மை விளக்கம் (2) சிவஞான சித்தியார்
(3) சிவஞான போதம் (4) கொடிக்கவி
(5) சிவப்பிரகாசம் (...........)

49) அட்டாங்க யோகங்கள் 3 அடங்கும் தொகுதி
(1) அணிமா, லகிமா மூலாதாரம்
(2) தியானம், யோகம், கரணம்
(3) நிட்டை, மணிப்பூராடகம், யோகம்
(4) இயமம், நியமம், ஆசனம்
(5) ஆசனம், மூலாதாரம், சுவாதிஸ்டானம் (...........)

50) சோழர்காலத்தில் ஆலயத் திருப்பணிக்கு பணிபுரிந்த பெண்ணடியார்களில் ஒருவர்
(1) குந்தவை (2) வானவன்மாதேவி (3) குலச்சிறையார்
(4) மங்கையற்கரசி (5) செம்பியன் மாதேவி (...........)